நாம் அனைவரும் நன்கு அறிந்த நைதரசன் **(N),** பொசுபரசு **(P),** பொட்டாசியம் **(K)** ஆகிய போசணைச்சத்துக்கள் முதன்மையான போசணைச்சத்துக்கள் எனப்படும். இப்போசணைச்சத்துக்கள் பயிரிற்கு அதிகளவில் அவசியப்படும் மேலும் இவை குறைவடையும் போது பயிரின் வளர்ச்சியும் விளைச்சலும் குறைவடையலாம்.

நைதரசன் (N): பயிரின் வளர்ச்சிக்கு அத்தியவசியமான புரதத் தொகுப்பு செயற்பாட்டில் பங்களிக்கின்றது. தாவரத்தில் பச்சையம், புரதம், மற்றும் இலைகள் தண்டு உட்பட சகல பாகங்களினதும் வளர்ச்சிக்கு அத்தியவசியமானது.

பொசுபரசு (P): பயிரில் சக்தி பரிமாற்றம், வேர்த் தொகுதியின் வளர்ச்சி, பூத்தல் செயற்பாடு, விதைகள் மற்றும் காய் உருவாக்கத்திற்கு அத்தியவசியமான போசணைச்சத்து ஒன்றாகும்.

பொட்டாசியம் (K): பயிரில் நொதியங்களின் செயற்பாடு, நீர் மற்றும் போசணைச்சத்துக்களின் கடத்தலினை ஒழுங்குப்படுத்தல் மற்றும் நோய் எதிர்ப்புச்சக்தியினை மேம்படுத்துவதில் முக்கிய பங்களிப்பு செய்யும்.

III. துணையான போசணைச்சத்துக்கள் [Secondary Nutrients] (Ca, Mg, S)

ஆரோக்கியமான பயிர் வளர்ச்சிக்கு துணையான போசணைச்சத்துக்கள் அத்தியவசியமாகும்.

- **கல்சியம் (Ca)**

  பயிரின் ஆரோக்கியமான, திடமான வளர்ச்சிக்கு அத்தியவசியமாகும். மேலும் வேர் மற்றும் நுனியரும்புகளின் வளர்ச்சியில் உதவும்.

- **மக்னீசியம் (Mg)**

  இது பயிரில் பச்சையத்தின் உருவாக்கத்தில் உதவும். உணவு உற்பத்தி மற்றும் கடத்தலில் முக்கியமானது. அத்துடன் பொசுபரசு போசணைச்சத்தின் அகத்துறிஞ்சல் மற்றும் கடத்தப்படல் செயற்பாட்டில் உதவும்.

- **கந்தகம் (S)**

  பயிர்களுக்கு தேவையான புரதத் தொகுப்பிற்கு அவசியப்படும் அமினோ அமிலங்களை உருவாக்குவதில் முக்கியமானது.

நாங்கள் பொதுவாக நிறைய சோறுடன் மரக்கறிகள், கீரை வகைகள், இறைச்சி மற்றும் மீன் வகைகளை குறைவாகச் சாப்பிடுகின்றோம். அவ்வாறே பயிர்களுக்கும் அதிகளவு முதன்மை போசணைச்சத்துக்களும் (N, P, K) குறைவான அளவில் துணையான போசணைச்சத்துக்களும் (Ca, Mg, S) தேவைப்படுகின்றன. எனவே பசளையாக N,P,K போசணைச்சத்துக்கள் அதிகளவிலும் (Ca, Mg, S) போசணைச்சத்துக்கள் குறைவாகவும் இடப்படுகின்றது.

IV. நுண் போசணைச்சத்துக்கள் [Micro Nutrients]


நுண் போசணைச்சத்துக்கள் (Fe, Mn, Zn, Cu, B, Mo, Cl, Ni) மிகவும் குறைவாக அவசியப்படும் அத்தியவசியமான போசணைச்சத்துக்கள் ஆகும். பெரும்பாலும் இவை ஒரு ஹெக்டயருக்கு ஒரு சில கிராம்கள் மாத்திரமே அவசியப்படும். மேலும் இவை மிகக் குறைந்த அளவிலேயே அவசியப்பட்டாலும் நுண் போசணைச்சத்துக்கள் இல்லாது பயிர்களினால் அவற்றின் வாழ்க்கை வட்டத்தை பூரணப்படுத்த முடியாது.

நுண் போசணைச்சத்துக்கள் நொதியங்களின் செயற்பாடு, ஓமோன்களின் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தல், ஒளித்தொகுப்பு, நைதரசன் பதித்தல் மற்றும் இனப்பெருக்க செயற்பாடுகளின் போது பயிரிற்கு அத்தியவசியமானவை.


பொதுவாக பெரும்பாலான பயிர்நிலங்களில் போதுமானளவு நுண் போசணைச்சத்துக்கள் காணப்படுவதனால் அவற்றை தனியாக பசளை ஒன்றாக மண்ணிற்கு சேர்க்க வேண்டியதில்லை. மேலும் மண்ணிற்கு சேர்க்கப்படும் சேதனப் பொருட்கள் பயிர்களுக்கு தேவையான அனைத்து துணையான மற்றும் நுண் போசணைச்சத்துக்களையும் மண்ணிற்கு வழங்குகின்றன.


நுண் போசணைச்சத்துக்கள் மிகக் குறைந்த அளவிலேயே அவசியப்படுவதனால் அவற்றை இடுவதனை மிகவும் அவதானத்துடன் மேற்கொள்ளல் வேண்டும். ஏனெனில் நுண் போசணைச்சத்துக்களை அளவிற்கு அதிகமாக இடும் போது அவை பெரும்பாலும் பயிர்களுக்கு நச்சுத்தன்மை கொண்டதாக மாறுவதற்கான வாய்ப்புள்ளது. எனவே நுண் போசணைச்சத்துக்களை இடும் போது உங்கள் பிரதேச விவசாயப் போதனாசிரியரின் உதவியை பெற்றுக் கொள்ளவும்.

பயிர்களுக்கு தேவையான போசணைச்சத்துக்களின் கூம்பகம் மேலே காட்டப்பட்டுள்ளது.



4 பயிரின் வளர்ச்சியில் போசணைச்சத்துக்களின் பங்களிப்பு






5 பயிர் வளர்ச்சியில் வேர்களின் பங்களிப்பு

பயிர்களும் நம்மை போலவே சுவாசிக்கின்றன. பயிர்கள் இலைகள், தண்டு மற்றும் வேரின் மூலம் சுவாசிக்கின்றன. மேலும் பயிர்கள் தமக்கு தேவையான ஒட்சிசனின் ஒரு பகுதி நீர் மற்றும் போசணைச்சத்துக்களை வேரின் மூலம் பெற்றுக் கொள்கின்றன. இதன்போது வேர்களில் காணப்படும் வேர் முடிகள் (மிகவும் மெல்லிய வேர்கள்) மூலம் நீரில் கரைந்த நிலையிலுள்ள போசணைச்சத்துக்களை (அயன்களாக) பயிரினால் நீருடன் சேர்த்து அகத்துறிஞ்சப்பட்டு பயிரின் வளர்ச்சி மற்றும் உயிர்வாழ்விற்கு அவசியமான பல்வேறு தொழிற்பாடுகளுக்காக உயிர்கலங்களுக்கு கடத்தப்படுகின்றது.

எனவே பசளை இடுவதற்கு முன்னர் பயிரிற்கு உரிய முறையில் நீர்ப்பாசனம் மேற்கொள்வதும், மண்ணின் ஈரலிப்புத்தன்மையை உரிய மட்டத்திற்கு சரி செய்து கொள்வதும் அவசியமாகும்.

ஆரோக்கியமான, நன்கு வளர்ச்சியடைந்த பயிரொன்றை உருவாக்குவதற்கு ஆரோக்கியமான வேர்த்தொகுதி ஒன்று காணப்படுவது அவசியமாகும்.

ஆரோக்கியமான நன்கு விருத்தியடைந்த வேர்த்தொகுதி ஒன்றின் வளர்ச்சிக்கு சிறந்த மண் கட்டமைப்பு மற்றும் மண் இழையமைப்பு கொண்ட வளமான மண் தேவையாகும். இவ்வாறான வளமான மண்கள் பயிர்களின் வேர்களுக்கும் மண்ணில் வாழும் நுண் உயிரிகள் உள்ளடங்களாக மண் உயிரிகளுக்கும் தேவையான மண்காற்று மற்றும் மண்வெப்பநிலையை பெற்று கொடுப்பதுடன் பயிர்களுக்கு அவசியமான போசணைச்சத்துக்கள் மற்றும் ஈரலிப்புத்தன்மையையும் பெற்றுக் கொடுக்கின்றன.



6 பயிர் வளர்ச்சியில் மண்ணின் பங்களிப்பு / பயிர்களுக்கு மண் ஏன் முக்கியமானது?

மண்ணானது பயிரின் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் முக்கியமான சில செயற்பாடுகளைச் செய்கின்றது. அவை என்ன எனப் பார்ப்போம்.

- **பௌதீக ரீதியான பங்களிப்பு**
  மண்ணானது பயிர்களின் வேர்த்தொகுதியின் விருத்திக்கும் அவை நிலைப்படுத்தப்படுவதற்கும் தேவையான ஊடகத்தையும் இடத்தையும் வழங்குகின்றது. அத்துடன் காற்று, மழை போன்ற சுற்றுச்சூழல் காரணிகளை எதிர்கொண்டு உறுதியாக நிலைத்து நிற்பதற்கும் உதவுகின்றது.

- **நீரை சேமித்து வைத்திருத்தல்**
  மண் பயிர்களின் வளர்ச்சி மற்றும் உயிர்வாழ்விற்குத் தேவையான நீரை சேமித்து வைத்திருக்கும். பயிர்களினால் மண்ணிலிருந்து வேர்களின் மூலம் அகத்துறிஞ்சப்படும் நீரானது ஒளித்தொகுப்பு, போசணைச்சத்துக்களின் கடத்தல் உட்பட பயிரின் உயிர்வாழ்விற்கு தேவையான சகல செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றது.

- **வாயுப் பரிமாற்றத்தினை மேற்கொள்ளல்**
  மண்ணானது பயிர்கள் மற்றும் மண் உயிரிகளுக்குத் தேவையான காற்றை சேமித்துக் கொள்கின்றது. இக்காற்றானது பயிரின் வேர்ச்சுவாசத்தின் போது ஒட்சிசன் மற்றும் காபனீரொட்சைட்டு வாயுக்களின் பரிமாற்றத்தில் உதவுவதுடன் பயிரின் சீரான வளர்ச்சியிலும் முக்கிய பங்களிப்பினை வழங்குகின்றது.

- **நுண் உயிரிகளுக்கு வாழிடங்களை வழங்குதல்**
  மண்ணானது சேதனப் பொருட்கள் மற்றும் ஏனைய சேர்வைகளை பிரிகையடையச் செய்து பயிர்களுக்குத் தேவையான போசணைச்சத்து வட்டங்களை பேணுவதில் பங்களிப்புச் செய்வதுடன் பல்வேறு வகையான நுண்உயிரிகளுக்கும் தேவையான வாழிடத்தினை வழங்குகின்றது.

- **போசணைச்சத்து மூலாதாரம் ஒன்றாக**
  பயிரின் வளர்ச்சிக்கு தேவையான போசணைச்சத்துக்களை வழங்கும் சேதனப் பொருட்கள் மற்றும் கனிமப் பொருட்கள் மண்ணில் காணப்படுகின்றன. இப் போசணைச்சத்துக்கள் பயிரின் வேர்களினால் அகத்துறிஞ்சப்பட்டு பயிர்களின் வளர்ச்சி மற்றும் உயிர்வாழ்விற்கு பயன்படுத்தப்படுகின்றன.

7 உங்களது அடுத்த பயிர்ச்செய்கையை ஆரம்பிக்க முன்னர் நீங்கள் மண்ணை பரிசோதிக்க வேண்டியது ஏன்?

புதிய பயிர்ச்செய்கை ஒன்றை ஆரம்பிப்பதற்கு முன்பாக மண்ணைப் பரிட்சித்து போசணைச்சத்துக்கள் தேவையான அளவு மாத்திரம் இடுவதானது மண்ணை உரிய முறையில் முகாமை செய்யும் செயற்பாட்டின் முக்கியமான படியொன்றாகும். இதன் மூலம் நீண்ட காலத்திற்கு தொடர்ச்சியான பயிர்ச்செய்கை மூலம் பொருளாதார ரீதியாக இலாபகரமான விளைச்சலொன்றை பெற்றுக் கொள்ள முடியுமாகும்.

நாம் இப்பொழுது மண் பரிசோதனை மேற்கொள்வதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் பற்றிப் பார்ப்போம்.



மண்ணில் அடங்கியுள்ள போசணைச்சத்துக்கள் தொடர்பான மதிப்பீட்டை பெற்றுக் கொடுத்தல்


மண் பரிசோதனை மூலம் பயிரின் வளர்ச்சிக்கு அவசியமான நைதரசன் **(N),** பொசுபரசு **(P),** பொட்டாசியம் **(K)** போன்ற அத்தியவசியமான போசணைச்சத்துக்களின் அளவுகள் தொடர்பான தகவல்கள் வழங்கப்படுகின்றது. இதன் மூலம் உங்கள் மண்ணில் போசணைச்சத்துப் பற்றாக்குறை காணப்படுகின்றதா? அல்லது போசணைச்சத்துக்கள் மேலதிகமாக காணப்படுகின்றதா? என்பதனை அறிந்து கொள்ள முடியுமாகும். இதற்கு மேலதிகமாக உங்களுக்கு இடவேண்டிய பசளை அளவினை குறிப்பிடும் பசளைச் சிபாரிசும் வழங்கப்படும்.

மண் pH பெறுமானத்தை அறிந்து கொள்ள முடியுமாதல்

மண் **pH** பெறுமானமானது, மண்ணின் அமில காரத்தன்மை அளவு மட்டம் தொடர்பான தெளிவைப் பெற்றுத்தரும். மண் **pH** பெறுமானமானது பயிர்கள் மண்ணிலிருந்து போசணைச்சத்துக்களை அகத்துறிஞ்சிக் கொள்ளும் திறனில் செல்வாக்குச் செலுத்துகின்றது. பெரும்பாலான பயிர்கள் மண்ணின் **pH** ஆனது 5.5 – 7.0 வீச்சில் உள்ள போது போசணைச்சத்துக்களை சிறந்த முறையில் அகத்துறிஞ்சிக் கொள்கின்றன.

மண் பரிசோதனை மூலம் உங்களது பயிர்நிலத்தின் **pH** பெறுமானமானது அடுத்த பயிர்ச்செய்கைக்கு பொருத்தமானதா? இல்லையா? என்பதனையும் **pH** பெறுமானத்தினை உரிய மட்டத்திற்கு திருத்தியமைக்க இட வேண்டிய சுண்ணாம்பு அல்லது டொலமைற்று அளவு தொடர்பான சிபாரிசையும் பெற்றுத் தருகின்றது.

பொதுவாக எமது நாட்டிலுள்ள பயிர்நிலங்களில் **pH** பெறுமானம் கூடிய மண்கள் மிக அரிதாகவே காணப்படுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் உங்களது பயிர்நிலத்தின் **pH** பெறுமானத்தை பொருத்தமான வீச்சிற்கு சரி செய்து கொள்ள உங்களது பிரதேச விவசாயப் போதனாசிரியரின் **(AI)** உதவியை நாடவும்.




மண்ணின் EC பெறுமானத்தை அறிந்து கொள்ள முடியுமாதல்.

EC பெறுமானமானது மண்ணின் அடங்கியுள்ள உப்பின் அளவு தொடர்பான தெளிவை பெற்றுத் தரும். மண்ணில் உப்புத்தன்மை அதிகமாக உள்ளபோது பயிர்களினால் நீர் மற்றும் போசணைச்சத்துக்கள் அகத்துறிஞ்சப்படுவதில் சிக்கல்கள் ஏற்படும். மேலும் இது பயிர்களுக்கு நச்சுத்தன்மையையும் ஏற்படுத்துகின்றது. இதனால் விளைச்சல் குறைவடையும்.

மண்ணின் உப்புத்தன்மையை முழுமையாக அகற்ற முடியாது. எனினும் அதிகளவில் நீரை பயன்படுத்தி கழுவி விடுவதனாலும், மண்ணிற்கு போதியளவு சேதனப் பொருட்களை சேர்ப்பதன் மூலமாகவும் மண்ணின் EC மட்டத்தை பராமரித்துக் கொள்ள முடியும்.

பெரும்பாலான பயிர்களின் சாதகமான வளர்ச்சிக்கு EC பெறுமானத்தின் வீச்சானது 0.8–1.8 dS/m இற்கு இடைப்பட்டதாக இருத்தல் பொருத்தமானது.

மண்ணின் pH மற்றும் EC பெறுமானங்கள் தொடர்பாக அறிந்து கொள்வதன் மூலம் விவசாயிகளுக்கு குறித்த மண்ணிற்கு பொருத்தமான பயிர்களை தெரிவு செய்து கொள்ள முடியுமாவதுடன் போசணைச்சத்து முகாமைத்துவம் மற்றும் நீர்ப்பாசன முறை தொடர்பான தீர்மானங்களையும் மேற்கொள்ள முடியுமாவதனால் பயிர்ச்செய்கையிலிருந்து கூடிய விளைச்சலொன்றை பெற்றுக் கொள்ள முடியுமாகும்.



மண் பகுப்பாய்வு அறிக்கை – பக்க இல. 1

Soil - Analytical Report

Central Soil & Fertilizer Testing Laboratory
Horticultural Crops Research & Development Institute
Gannoruwa, Peradeniya
Telephone: 081-2388011-3

ISO/IEC 17025
TL 090 - 01

Customer : [redacted] Address : [redacted]	FARM Location &Extent : Dunuke ulla Province : Central District : Kandy

Crop Group : Vegetable
Customer ID : 01
Date of receipt : 2024/04/25
Suitability of sample : Suitable for analysis
Sample Weight : 1kg

Lab ID : ST/2024/107

Date of tests performed: 2024/05/10

Test Results

Soil Characteristics	Test Method	Results	Interpretation**
pH (1:1 in water)/ pH பெறுமானம்	*CS &FTL / P /7.2/03.1 (pH)*	5.3	Moderately acidic / ஓரளவு அமிலத் தன்மையானது
EC (dS/m) (1:5 water)/ மின் கடத்துதிறன்	*CS &FTL / P /7.2/03.2 (EC)*	0.057	Low / குறைவு
Available P (ppm)/ பெற்றுக் கொள்ள முடியுமான பொசுபரசு	*CS &FTL / P /7.2/03.3 (AV-P)*	40.0	High / அதிகம்
Exchangeable K as Ammonium acetate extract (ppm)/ பரிமாற்றக்கூடிய பொட்டாசியம	*CS &FTL / P /7.2/03.4 (EX-K)*	272.3	Medium / நடுத்தரமானது
Organic matter (%) / சேதனப் பொருட்கள்	*CS &FTL / P /7.2/03.6 (OM)*	3.48	Low / குறைவு
*Texture/ இழையமைப்பு	*By Feel*	Sand	Not Sutable / பொருத்தமற்றது

*Non Accredited

This report refers only to the samples submitted on 2024/04/25by the customer identified in this report.
***** Interpretation is given according to the fertilizer recommendations for only food crops developed by Department of Agriculture***
Interpretation and annexes 3/5 are not applicable for "Other Crop Group"

Fertilizer Recommendations for Horticultural Crop, (2010)
Manual of Soil Test Based Fertilizer Recommendation for Rice, (2014)
Soil Test Based Fertilizer Recommendations , (1995, : Department of Agriculture)
Techno Guide for Crop Recommendations , (2020)

Analyzed by

Checked by

Authorized Signatory

2024/05/13
Date

HEAD
DIVISION OF CHEMISTRY
HORTICULTURAL CROP RESEARCH
& DEVELOPMENT INSTITUTE
DEPARTMENT OF AGRICULTUR
GANNORUWA, PERADENIY

Opinion and remarks is attached in annexes - 3 / 5

1 of 1

மண் பகுப்பாய்வு அறிக்கை – பக்க இல. 2

இணைப்பு - 3

இவ்வெளிக்களத்தில்

1. pH பெறுமானத்தின் அடிப்படையில் மண்,

~~மிகவும் அமிலத்தன்மையானது / அமிலத்தன்மையானது~~ / ஓரளவு அமிலத்தன்மையானது/ ~~சிறிதளவு அமிலத்தன்மையானது / நடுநிலையானது~~

★ டொலமைற்று இடல் - ~~அவசியம்~~ / அவசியமில்லை எனினும் அடுத்த போகத்தில் மண்ணின் pH அளவை பரீட்சிக்கவும்.

★ pH பெறுமானம் 5 இலும் குறைவாயின் மாத்திரம் ஒரு ஏக்கரிற்கு டொலமைற்றும் 800 கிலோ கிராமினை நிலப்பண்படுத்தலின் போது மண்ணிற்கு இட்டு மண்ணுடன் கலந்து விடவும்.

2. மின் கடத்துத்திறனின் (EC) அடிப்படையில் மண்ணில் உப்புத்தன்மை காணப்படுகின்றது. / ~~காணப்படுவதற்கான வாய்ப்பு உள்ளது~~ / இல்லை. எனினும் எப்பொழுதும் வெளிக்களத்தில் நீர் வடிப்பினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

3. மண்ணில் காணப்படும் பொசுபரசு அளவு ~~குறைவு / நடுத்தரமானது~~ / அதிகம்

★ பொசுபரசு அடங்கியுள்ள இரசாயன பசளை இடல் அவசியம் / ~~அவசியமில்லை.~~

★ இணைப்பு 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள அளவு பொசுபரசு அடங்கியுள்ள இரசாயன பசளையினை (டி.எஸ்.பி.) மாத்திரம் பயிர்ச்செய்கைக்கு இடவும்.

4. மண்ணில் காணப்படும் பொட்டாசியம் அளவு ~~மிகவும் குறைவு / குறைவு~~ / நடுத்தரமானது / ~~அதிகம்~~

★ பொட்டாசியம் அடங்கியுள்ள இரசாயன பசளை இடல் அவசியம் / ~~அவசியமில்லை.~~

★ இணைப்பு 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள அளவு பொட்டாசியம் அடங்கியுள்ள இரசாயன பசளையினை (எம்.ஓ.பி.) மாத்திரம் பயிர்ச்செய்கைக்கு இடவும்.

5. மண்ணில் காணப்படும் சேதனப் பொருட்களின் அளவு குறைவு / ~~போதுமானது / அதிகம்~~

★ சேதனப் பசளை ஒரு ஏக்கரிற்கு 4000 கிலோ கிராம் இடவும்.

★ சேதனப் பசளையாக கோழி எருவை பயன்படுத்துவதாயின் ஒரு ஏக்கரிற்கு 2000 கிலோ கிராம் போதுமானது.

★ ~~இந்நிலைமையை தொடர்ச்சியாக பேணவும்.~~

6. நெற்செய்கைக்கு யூரியா பசளை இடும் போது இலை நிறச்சுட்டியை பயன்படுத்தி அதனடிப்படையில் பசளை இடவும்.

.....
.....

ஒப்பம் திகதி

சிபாரிசு

ST/2024/107

பசளை சிபாரிசு செய்யப்படும் நிலப்பரப்பு (ஏக்கர்)

இணைப்பு 05

இடவேண்டிய பசளை வகை மற்றும் அளவு / பயிர்	அடிகட்டுப் பசளை			முதலாவது மேற்கட்டுப் பசளை		இரண்டாவது மேற்கட்டுப் பசளை		மூன்றாவது மேற்கட்டுப் பசளை		நான்காவது மேற்கட்டுப் பசளை		ஐந்தாவது மேற்கட்டுப் பசளை	
	யூ / அமோ (Kg/Ac)	டி.எஸ்.ப (Kg/Ac)	எம்.ஒ.பி (Kg/Ac)	யூ / அமோ (Kg/Ac)	எம்.ஒ.பி (Kg/Ac)	யூ / அமோ (Kg/Ac)	எம்.ஒ.பி (Kg/Ac)	யூ / அமோ (Kg/Ac)	எம்.ஒ.பி (Kg/Ac)	யூ / அமோ (Kg/Ac)	எம்.ஒ.பி (Kg/Ac)	யூ / அமோ (Kg/Ac)	எம்.ஒ.பி (Kg/Ac)
கறிமிளகாய	40	22	13	40	13	40	13	—	—	—	—	—	—
	நடுவதற்கு முன்			நட்டு..1..வாரத்தில்		நட்டு..2..வாரத்தில்		நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்	
	நடுவதற்கு முன்			நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்	
	நடுவதற்கு முன்			நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்	
	நடுவதற்கு முன்			நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்	
	நடுவதற்கு முன்			நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்	
	நடுவதற்கு முன்			நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்	
	நடுவதற்கு முன்			நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்	
	நடுவதற்கு முன்			நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்		நட்டு.....வாரத்தில்	

ஒப்பம்
(பதவி முத்திரை)

HEAD
DIVISION OF CHEMISTRY
HORTICULTURAL CROP RESEARCH
& DEVELOPMENT INSTITUTE
DEPARTMENT OF AGR[illegible]

2024/05/21
திகதி

மண் பகுப்பாய்வு அறிக்கை பக்க இல. 03

எதிர்வரும் பயிர்ச்செய்கைக்கான பசளைச் சிபாரிசு

8 உங்களது மண்ணை பரீட்சித்து கொள்வது எப்படி?

உங்களது பயிர்நிலத்திலிருந்து உரிய நியமங்களுக்கு அமைவாக மண் மாதிரி ஒன்றை தயார் செய்து அதனை உங்கள் பிரதேச விவசாயப் போதனாசிரியரிடம் வழங்கவும். அவர் உங்களது மண் மாதிரியை ஆய்வுகூடத்திற்கு அனுப்பி பரிட்சித்துத் தருவார்.

மண் மாதிரி ஒன்றை தயார் செய்து கொள்ளும் முறை


தேவையானப் பொருட்கள்

- மண்வெட்டி அல்லது மண் ஓகார் ஒன்று
- மண்ணை சேகரித்து கொள்ள சுத்தமான பொலிசெக் உறை ஒன்று
- மாதிரியை தயார் செய்து கொள்ள சுத்தமான பொலித்தீன் துண்டு ஒன்று
- ஆய்வுகூடத்திற்கு அனுப்பும் மாதிரியினை(500g) இடுவதற்கு பொலித்தீன் உறைகள் இரண்டு
- இறப்பர் பட்டி
- பேனை ஒன்று மற்றும் கார்போர்ட் அட்டை துண்டுகள் இரண்டு

மண் மாதிரி ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்

- முடியுமான சகல சந்தர்ப்பங்களிலும் இரண்டு போகங்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மண் மாதிரியினைப் பெற்றுக் கொள்ளவும்.
- பயிர்நிலத்தில் பயிர்கள் உள்ள சந்தர்ப்பத்தில் மண் மாதிரியினை எடுக்க வேண்டி ஏற்படின் பசளையிடுவதற்கு முன்பாக இரண்டு பயிர்வரிசைகளுக்கு இடையிலிருந்து மாதிரியினை எடுக்கவும்.
- மண்ணின் நிறம், கட்டமைப்பு மற்றும் நீர்வடிப்புத்தன்மை ஒத்ததாகக் காணப்படும் நிலப்பகுதிகளை தனி அலகொன்றாக கருதவும். இவ்வாறான ஒவ்வொரு நில அலகுகளுக்கும் தனித்தனியாக மாதிரிகளை எடுத்துக் கொள்ளவும். அதாவது ஒரே நிலமாக காணப்பட்டாலும் நிலத்திலுள்ள மண் இடத்திற்கு இடம் மாறுபடுமெனின் ஒவ்வொரு மண்ணுக்கும் தனித்தனியாக மண்மாதிரிகள் தயார் செய்யப்படல் வேண்டும்.
- பசளைகள் அல்லது சேதனப் பொருட்கள் குவித்து வைக்கப்பட்ட இடங்கள், குப்பைகள் சேகரிக்கப்பட்ட இடங்கள் மற்றும் நீரோடைகளுக்கு அருகிலிருந்து மண் மாதிரிகளை பெற்றுக் கொள்ள வேண்டாம்.
- பசளைகள் மற்றும் சேதனப் பொருட்கள் காணப்பட்ட வெற்று உறைகள், கொள்கலன்கள் மற்றும் உபகரணங்களை மண் மாதிரிகளை பெற்றுக் கொள்ள பயன்படுத்த வேண்டாம்.
- மண் மாதிரிகளை பொதி செய்வதற்கு துணி மற்றும் கடதாசி உறைகளை பயன்படுத்த வேண்டாம்.


உங்கள் பயிர்நிலத்தின் அனைத்துப் பகுதிளையும் பிரதிநிதிப்படுத்தும் விதத்தில் மண் மாதிரியினை பெற்றுக் கொள்வதற்கு பொருத்தமான இடங்களை இனங்கண்டு கொள்ளவும். (ஒரு ஏக்கரிற்கு சுமார் 8 இடங்கள்) இதற்கு கீழே தரப்பட்டுள்ள முறையை பின்பற்ற முடியும்.



எழுந்தமான முறையில் | கிடையாக | மூலை விட்டத்தின் வழியே | கோணல் மாணலாக (சிக் சக்)



1. அடையாளம் காணப்பட்ட நிலப்பகுதிகளின் மேற்பரப்பில் காணப்படும் களைகள், சேதனப் பொருட்கள் மற்றும் சிறு கற்களை சுரண்டி அகற்றி விடவும்.



2. படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு மண்வெட்டியினைப் பயன்படுத்தி மேல் மட்டத்திலிருந்து 6 அங்குல ஆழத்தில் ஒரு அங்குலம் அகலமான மண் படை ஒன்றை மண் சேகரிக்கும் உறையினுள் இடவும்.



3. இவ்விதம் சேகரித்த அனைத்து மண்களையும் சுத்தமான மேற்பரப்பொன்றில் பரவி விடவும். அதிலுள்ள சிறுகற்கள், வேர்த் துண்டுகள் மற்றும் வேறும் கழிவு பொருட்களை அகற்றி விடவும். பின்னர் அனைத்து மண்களையும் நன்கு கலந்து விடவும்.





4. படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு கலக்கப்பட்ட மண்ணை மெல்லியதாக பரவி நான்கு பாகங்களாக பிரித்து அதில் இரண்டு பாகங்களை அகற்றி விடவும். மீதமாகவுள்ள இரண்டு பாகங்களையும் நன்கு கலந்து விடவும். இவ்விதம் மீண்டும் மீண்டும் செய்வதன் மூலம் 500 கிராம் நிறையுள்ள இறுதி மண் கலவையினை தயார் செய்து கொள்ளவும்.

5. மேலே குறிப்பிட்ட விதத்தில் தயார் செய்து கொண்ட சுமார் 500 கிராம் நிறையுள்ள மண் மாதிரியினை படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு ஆய்வுகூடத்திற்கு அனுப்புவதற்காக பொலித்தீன் உறையில் பொதி செய்யவும்.

6. அடுத்து மண் மாதிரியின் தகவல் படிவத்தை பூரணப்படுத்தி விவசாயப் போதனாசிரியரிடம் அல்லது அருகிலுள்ள விவசாய ஆய்வுகூடத்திற்கு ஒப்படைக்கவும்.





மேற்படி மண் மாதிரியை தயார் செய்து கொள்வதற்கு உங்கள் பிரதேச விவசாயப் போதனாசிரியரின் உதவியை நாடவும்.

9 எதிர்வரும் பயிர்ச்செய்கை போகத்திற்கு மண்ணை உரிய முறையில் தயார் செய்து கொள்வோம்.

மண் பரிசோதனையின் முடிவுகள் மற்றும் சிபாரிசுகளின் அடிப்படையில் அடுத்த பயிர்ச்செய்கைக்காக மண்ணை தயார் செய்து கொள்ள வேண்டும்.

1. முதலில் கடந்த போகப் பயிர்ச்செய்கையின் பயிர் மீதிகள் மற்றும் களைத் தாவரங்களை பயிர் நிலத்திலிருந்து அகற்றி விடவும். இது நோய் மற்றும் பீடைத் தாக்கங்களை தவிர்க்க உதவும் அத்துடன் போசணைக்காக களைத் தாவரங்களுடன் ஏற்படும் போட்டியையும் குறைக்கும்.



2. மண்ணிற்கு நன்கு உக்கிய கூட்டெரு, கோழிஎரு, சாணம் மற்றும் ஆட்டெரு போன்ற சேதனப் பொருட்களை சேர்க்கவும். சேதனப் பொருட்கள் மண்ணின் கட்டமைப்பை மேம்படுத்துவதுடன் ஈரலிப்பை தொடர்ச்சியாக பேணுவதற்கும் உதவும். அத்துடன் தாவரத்திற்கு தேவையான போசணைச்சத்துக்களையும் பெற்றுக் கொடுக்கும்.

விவசாயத் திணைக்களத்தின் சிபாரிசு
ஒரு ஏக்கரிற்கு சேதனப் பொருட்கள் - 4000 கிலோகிராம்

3. மண் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் உங்களது மண்ணின் pH பெறுமானத்தை சரிசெய்ய வேண்டின் சிபாரிசு செய்யப்பட்டுள்ள அளவு சுண்ணாம்பு அல்லது டொலமைற்றினை இடவும்.

4. முதலாவது நிலப்பண்டுத்தல் - மண்ணை தளர்வாக்கி சேதனப் பொருட்கள் மண்ணுடன் நன்கு கலக்கும் விதத்தில் மண் பிரட்டி விடவும்.

5. இரண்டாவது மண் கட்டிகளை உடைத்தல் - மண்ணை மட்டப்படுத்தி விதை மற்றும் விதை நாற்றுக்களை நடுகை செய்வதற்கு பொருத்தமான மெல்லிய மண்ணை உருவாக்கிக் கொள்வதற்கு மண்ணில் காணப்படும் பெரிய மண்கட்டிகளை உடைத்துக் கொள்ள வேண்டும்.

10 பயிர்ச்செய்கைகளில் பயன்படுத்தப்படும் பசளை வகைகள்

தனிப் பசளைகள்

இவை பொதுவாக நெல் மற்றும் வயற்பயிர்களுக்கு பயன்படுத்தப்படுகின்றது. இப்பசளைகள் பிரதானமாக ஒரு போசணைச்சத்தினை பெற்றுக் கொடுக்கும்.

யூரியா – நைதரசனினை **(N)** பெற்றுக் கொடுக்கும்
மும்மை சுப்பர் பொசுபேற்று – பொசுபரசினை **(P)** பெற்றுக் கொடுக்கும்
மியுரேற்று பொட்டாசு – பொட்டாசியத்தினை **(K)** பெற்றுக் கொடுக்கும்

பயிரின் போசணைச்சத்து தேவைக்கு அமைவாக இவற்றை இடுவது மிகவும் இலகுவானது.

கலப்பு பசளைகள்

இவை தனிப் பசளைகள் இரண்டு அல்லது இரண்டை விட அதிகமான பசளைகளை கலப்பதால் உருவாக்கப்படுகின்றது.

உ-ம் - 15 : 15: 15 போன்ற **NPK** கலவைப் பசளை

பல்வேறு நிறுவனங்கள் குறித்த பயிர்களுக்கு விசேடமான சிறப்புப் பசளை கலவைகளை தயாரித்து வெவ்வேறு பெயர்களில் சந்தைக்கு விநியோகிக்கின்றன. இந்நிறுவனங்கள் இவ்வாறான கலவைப் பசளைகளின் பயன்பாட்டை ஊக்குவிக்கின்றன. மேலும் இவை சந்தையில் பரவலாகக் கிடைக்கின்றன. பயிர்களுக்கு ஏற்றவாறு தயாரிக்கப்பட்ட குறித்த பயிர்களுக்கு விசேடமான சிறப்புக் கலவைகளை பயன்படுத்துவது இலகுவானது நேரத்தையும் மீதப்படுத்தலாம். எனினும் மண்ணின் போசணைச்சத்து தேவைக்கு ஏற்ப இட முடியாது.

திரவப் பசளைகள்

இவை பயிருக்கு தேவையான போசணைச்சத்துக்களை விரைவாகப் பெற்றுக் கொடுப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றன. இவை பொதுவாக இலைகளுக்கு விசிறப்படும் அல்லது நீரில் கரைத்து நீர்ப்பாசன நீர் மூலம் பயிருக்கு வழங்கப்படும்.

உ-ம்: NPK அடங்கியுள்ள திரவப்பசளைகள் (அமோனியம் நைத்திரேற்று, டை அமோனியம் பொசுபேற்று, பொட்டாசியம் சல்பேற்று போன்றன)

துணையான போசணைச்சத்து அடங்கியுள்ள திரவப் பசளை (கல்சியம் நைத்திரேற்று, மங்கனிசு சல்பேற்று போன்றன)

நுண் போசணைச்சத்து அடங்கியுள்ள திரவப் பசளைகள் (Zn, B, Fe)
சேதனத் திரவப் பசளை (புழு பிரித்தெடுப்பு, கூட்டெரு பிரித்தெடுப்பு)

போசணைச்சத்துப் பற்றாக்குறையை விரைவாக ஈடு செய்ய இது மிகவும் பயனுள்ளது.

சேதனப் பசளை

நிலைபேறான, சுற்றுச்சூழலுக்கு தோழமையான விவசாயத்திற்கு மிகவும் பொருத்தமானது.

உ-ம்: **கூட்டெரு**
பண்ணைப் பசளைகள் (சாணம், கோழிஎரு)
பசுந்தாட் பசளை (உ-ம்: சூரியகாந்தி, கிளிசிரிடியா)

சேதனப் பசளைகள் மண்ணின் கட்டமைப்பினை மேம்படுத்தி நுண்உயிரிகளின் செயற்பாட்டிற்கு சாதகமான சூழல் நிலைமைகளை உருவாக்குவதன் மூலம் பயிரின் வளர்ச்சிக்கு வளமான மண்ணை பெற்றுத் தரும்.

உயிரியல் பசளைகள்

உயிரியல் பசளைகளில் மண்ணில் அடங்கியுள்ள போசணைச்சத்துக்களை பயிர்களுக்கு பெற்றுக் கொடுக்கும் ஆற்றலினை அதிகரிக்கும் பயனுள்ள நுண் உயிரிகள் காணப்படுவதால் பயிர்களால் போசணைச்சத்துக்கள் அகத்துறிஞ்சப்படுவதனை இலகுபடுத்தும். இலங்கையில் இவை குறைவாகவே பயன்படுத்தப்படுகின்றன. உயிரியல் பசளைகள் மூலம் மண்ணில் அடங்கியுள்ள போசணைச்சத்துக்களின் கிடைப்புத்தன்மை அதிகரிக்கப்படுவதனால் இரசாயனப் பசளைப் பாவனையை குறைத்துக் கொள்ள முடியுமாகும்.

விவசாயத் திணைக்களத்தினால் வழங்கப்படும் பசளைச் சிபாரிசுகள் தனிப் பசளைகளை அடிப்படையாகக் கொண்டே வழங்கப்படுகின்றது. இதற்கான காரணங்கள்:

- அடிக்கட்டுப் பசளை இடும் போது NPK ஆகிய மூன்று போசணைச்சத்துக்களும் அவசியப்பட்ட போதும் மேற்கட்டு பசளை இடும் போது N மற்றும் K பசளைகள் மட்டுமே அவசியப்படும். எமது நாட்டில் சந்தையிலுள்ள பெரும்பாலான கலவைப் பசளைகளில் NPK ஆகிய மூன்று போசணைச்சத்துக்களும் காணப்படுகின்றன. எனவே மேற்கட்டு பசளையாக கலவைப் பசளைகளை பயன்படுத்தும் போது மண்ணிற்கு அளவிற்கதிகமாக பொசுபரசு (P) சேர்க்கப்படுகின்றது. மண்ணில் பொசுபரசு (P) அளவு அதிகரிப்பதனால் பயிருக்கு அத்தியவசியமான கல்சியம், நாகம் போன்ற போசணைச்சத்துக்களின் அகத்துறிஞ்சல் பாதிப்படையும். இதன் காரணமாக குறித்த போசணைச்சத்துக்கள் மண்ணில் காணப்பட்ட போதிலும் குறித்த பயிர்களில் பற்றாக்குறை அறிகுறிகள் வெளிக்காட்டப்படலாம்.
- மண்ணை பரீட்சித்து குறித்த மண்களுக்கு தேவையான அளவிற்கு பசளைச் சிபாரிசுகள் வழங்கப்படுவதனால் மண்களுக்கு இடவேண்டிய போசணைச்சத்துக்களும் வேறுபடலாம். எனவே பயிர்களுக்கு தேவையான பிரித்தியேகமான போசணைச்சத்து அளவுகள் தனிப் பசளைகளாக இடப்படல் வேண்டும்.

தனிப்பசளை பாவனையால் மண்ணிற்கு தேவையற்ற விதத்தில் போசணைச்சத்துக்கள் சேர்க்கப்படுவது தடுக்கப்படுகின்றது. அத்துடன் மேலதிகமான போசணைச்சத்துக்கள் கழுவிச் செல்லப்பட்டு எமது குளங்கள் மற்றும் ஆறுகள் மாசடைவதும் தடுக்கப்படுகின்றது. மேலும் உங்களது பணமும் மீதப்படுத்தப்படுகின்றது.

11 பசளைகளை பயன்படுத்தும் சந்தர்ப்பங்களில் உங்களை தயார் செய்து கொள்ள வேண்டிய விதம்

இரசாயனப் பசளைகள் தோலில் படுவதனால் தோலில் ஒவ்வாமை ஏற்படலாம் அல்லது எரிவு ஏற்படலாம். மேலும் சிறிய பசளைத் துகள்கள்/ மாசுக்கள் கண்ணில் படுவதனால் கண்கள் பாதிப்படையலாம். பசளைத் துணிக்கைகள் சுவாசம் மூலம் உள்ளெடுக்கப்படும் சந்தர்ப்பங்களில் நுரையிரல்கள் பாதிப்படையலாம். நீங்கள் சில வகையான பசளைகளுடன் நீண்ட நேரத்திற்கு தொடுகையிலுள்ள போது நஞ்சாக்கம் அடையலாம்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சுகாதாரப் பிரச்சினைகள் மற்றும் ஆபத்துக்களை குறைத்துக் கொள்வதற்கு தோலுடன் பசளைகள் தொடுகையுறுவதை தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். பசளைகளை பயன்படுத்துவதற்கு முன்னர் பொருத்தமான ஆடைத்தொகுதி ஒன்றை (கையுறை, முகமூடி, சப்பாத்து, நீளமான கைகளை கொண்ட சேட், மற்றும் நீளமான காற்சட்டை) அணிந்திருத்தல் வேண்டும்.



பசளைகளை பயன்படுத்தும் போது நினைவில் கொள்ள வேண்டிய விடயங்கள்

- கழுவ முடியுமான ஆடைகளை அணியவும். பசளையிடும் போது பெரும்பாலும் ஆடைகள் அசுத்தமடையும். ஆகையால் அழுக்காவதை பொருட்படுத்த தேவையற்ற ஆடைகளைத் தெரிவு செய்து கொள்ளுங்கள்.
- பசளை இட்ட பின்னர், பசளை உங்கள் தோலில் தோய்ந்திருந்தால் இவ்விடங்களை உடனடியாக சவர்க்காரமிட்டு நன்கு கழுவி விடவும். பின்னர் உடைகளை மாற்றிக் கொள்ளவும்.

12 பசளை இடும் விதம்


நாங்கள் பசளை இடுதலை பயிரினை நட முன்னரும் (அடிக்கட்டுப் பசளை) பயிரின் வளர்ச்சிப் பருவத்திலும் (மேற்கட்டுப் பசளை) மேற்கொள்கின்றோம்.

a. அடிக்கட்டுப் பசளை (Basal Dressing)

உங்களது மண் பரிசோதனை முடிவுகள் மற்றும் அடுத்து பயிரிட உத்தேசித்துள்ள பயிரின் போசணைச்சத்துக்கள் தேவையின் அடிப்படையில் உங்களுக்கு தரப்பட்டுள்ள அடிக்கட்டுப் பசளை சிபாரிசினை விதை அல்லது விதை நாற்றினை நடுவதற்கு ஒரு நாளிற்கு முன்னர் மண்ணிற்கு சேர்த்து நன்கு கலந்து விடவும். அடிக்கட்டு பசளை இடுவதை பயிரிடப்படும் பயிரின் அடிப்படையில் மூன்று விதமாக மேற்கொள்ள முடியும்.

I. அடிக்கட்டு பசளையை மண்ணின் மேற்பரப்பில் ஒரே சீராக இடல்.

வேர் ஆழத்திற்கு வளர்ச்சியடையும் கரட், முள்ளங்கி, பீட்றூட் மற்றும் லீக்ஸ் போன்ற பயிர்களுக்கு பொருத்தமானது.



பாத்தியை அமைக்க வேண்டிய இடத்தை தீர்மானித்து பயிரிட உத்தேசித்துள்ள பயிரின் வளர்ச்சிக்கு பொருத்தமான விதத்தில் மண்ணை மட்டப்படுத்தி பாத்திகளை தயார் செய்து கொள்ளவும்.

விதை அல்லது விதை நாற்றினை நடுவதற்கு ஒரு நாளிற்கு முன்பாக அடிக்கட்டுப் பசளைக் கலவையினை பாத்தியின் மேற்பரப்பில் ஒரே சீராக பரவி விடவும்.

அடிக்கட்டு பசளை கலவையை பாத்தியின் மண்ணுடன் கலந்து விடவும். இறுதியாக விதைகள் முளைப்பதற்கு பொருத்தமான விதத்தில் பாத்திகளின் மேற்பரப்பினை மென்மையாக்கவும்.

II. அடிக்கட்டுப் பசளையை வரிசையில் இடல

வரிசைகளுக்கு இடையில் இடைவெளி விட்டு பயிரிடப்படும் வேர்கள் ஆழத்திற்கு விருத்தியடையும் உருளைக்கிழங்கு, போஞ்சி, கோவா, பூக்கோவா போன்ற பயிர்களுக்கு பொருத்தமானது.

1




மண்ணைத் தயார் செய்து நாற்றுக்களை நடுவதற்கு உரிய இடைவெளியில் வரம்பு மற்றும் சால்களை தயார் செய்து கொள்ளவும்.

2




சால் பகுதியில் நாற்றுக்களை நடுமிடங்களின் வழியே கைக் கரண்டியை (சவல்) பயன்படுத்தி சுமார் 5-8 சென்றி மீற்றர் ஆழத்திற்கு சிறிய காண் ஒன்றை உருவாக்கி அதனுள் அடிக் கட்டுப்பசளைக் கலவையினை இடவும். இதனுடன் சிறிதளவு சேதனப் பொருட்களையும் சேர்ப்பது மிகவும் பொருத்தமானது.

3



பின்னர் பசளைக் கலவையை மண்ணுடன் கலந்து விடவும்.


4



பசளையானது விதை மற்றும் விதை நாற்றுக்களுடன் நேரடியாக தொடர்புறாத விதத்தில் சுமார் 2-3 சென்றி மீற்றர் தடிப்பான மண் படையால் மூடி விடவும். ஒன்று அல்லது இரண்டு நாட்களின் பின்னர் விதை அல்லது விதை நாற்றுக்களை நடவும்.

III. அடிக்கட்டுப் பசளையை நாற்று நடுவதற்கு உத்தேசித்துள்ள நடுகைக் குழிகளுக்கு இடல்.


தக்காளி, கறிமிளகாய், மிளகாய், கத்தரி போன்ற பயிர்களுக்குப் பொருத்தமானது.



உரிய இடைவெளியில் நடுகைக் குழிகளை வெட்டிக் கொள்ளவும்.

பசளையை நடுகைக் குழிக்கு இட்டு மண்ணுடன் நன்கு கலந்து விடவும்.

ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு பின்னர் விதை நாற்றுக்களை நடவும்.



நாற்றுக்கு மண் அணைக்கவும்.

மண் ஈரலிப்பை பேண உரிய அளவிற்கு நீர் பாய்ச்சவும்.


இங்கு நாற்றுக்களை நட உத்தேசித்துள்ள நடுகைக் குழிகளுக்கு நேரடியாக பசளை இடப்படும். பசளை மண்ணுடன் ஓரளவு கலக்கப்படும். பசளை வெளித் தெரியாத விதத்தில் சுமார் 2-3 சென்றிமீற்றர் தடிப்பில் மண் படை இடப்படும். ஒன்று அல்லது இரண்டு நாட்களின் பின் விதை நாற்றுக்கள் நடவும். மண் ஈரலிப்பை பேண உரிய அளவிற்கு நீர்ப் பாய்ச்சவும்.

b. பயிரின் வளர்ச்சிப் பருவத்தில் பசளை இடல். (Top Dressing)

உங்களது மண் பரிசோதனை முடிவுகள் மற்றும் நீங்கள் பயிரிட்டுள்ள பயிரின் போசணைத் தேவையின் அடிப்படையில் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மேற்கட்டு பசளைச் சிபாரிசினை மண்ணிற்கு சேர்க்கவும். பயிரிடப்பட்டுள்ள பயிரின் அடிப்படையில் மூன்று விதத்தில் பசளையிட முடியும்.


மேற்கட்டு பசளை இடுவதற்கு முன்னைய தினம் பயிர்ச்செய்கைக்கு நன்றாக நீர்ப்பாசனம் மேற்கொள்ள வேண்டும் என்பதனை நினைவில் வைத்திருக்கவும்.

I. நாற்று வரிசையின் பக்கவாட்டில் ஒரு பட்டி ஒன்றை போன்று பசளையிடல்




- இதன் போது நாற்றுக்களின் அடிப்பகுதியிலிருந்து 5-10 சென்றிமீற்றர் தொலைவில் 2-3 சென்றிமீற்றர் ஆழத்திற்கு காண் ஒன்றை வெட்டி அதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ள அளவு மேற்கட்டுப் பசளையை இடவும்.
- பசளையை மண்ணுடன் ஓரளவிற்கு கலந்து மெல்லிய மண்படை ஒன்றினால் மூடிவிடவும்.
- வரிசைகளுக்கு இடையில் இடைவெளி விட்டு பயிரிடப்படும் வேர்கள் ஆழத்திற்கு விருத்தியடையும் உருளைக்கிழங்கு, போஞ்சி, கோவா, பூக்கோவா போன்ற பயிர்களுக்கு பொருத்தமானது.

II. நாற்றை சுற்றி வர வளையம் ஒன்றாக இடல்



- இதன் போது நாற்றுக்களின் அடிப்பகுதியிலிருந்து 5-10 சென்றிமீற்றர் தொலைவில் வளையம் ஒன்றாக 2-3 சென்றிமீற்றர் ஆழத்திற்கு காண் ஒன்றை வெட்டி அதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ள அளவு மேற்கட்டுப் பசளையை இடவும்.
- பசளையை மண்ணுடன் ஓரளவிற்கு கலந்து மெல்லிய மண்படை ஒன்றினால் மூடிவிடவும்.
- தக்காளி, கத்தரி போன்ற இடைவெளி விட்டு பயிரிடப்படும் மரக்கறிப் பயிர்களுக்கு மிகவும் பொருத்தமானது.

III. மண் மேற்பரப்பில் ஒரே சீராக இடல்



- இவ்விதத்தில் பசளையிடும் போது போசணைச்சத்துக்களின் இழப்பை குறைத்துக் கொள்வதற்காக பயிர்ச்செய்கைக்கு நீர்ப்பாசனம் மேற்கொண்ட பின்னர் அல்லது மழைவீழ்ச்சியின் பின்னர் பசளை இடுவது மிகவும் பொருத்தமானது.
- வேர்கள் ஆழத்திற்கு விருத்தியடையும் கரட், முள்ளங்கி, பீட்றூட் போன்ற மரக்கறி வகைகளுக்கும் பசளி, சலாது, கொத்தமல்லி, கடுகு போன்ற இலை மரக்கறி செய்கைகளுக்கும் இம்முறை பொருத்தமானது.


மேற்கட்டுப் பசளை இடும் போது கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்






- நாற்றின் தண்டின் அடிப்பகுதிக்கு நேரடியாக பசளைகளை இட வேண்டாம். தண்டிலிருந்து சற்று தூரமாக பசளை இடுவதே மிகவும் பொருத்தமானது.

- தாவரத்தால் போசணைச்சத்துக்கள் வினைத்திறனாக உறிஞ்சப்படுவதற்கு தாவரத்தின் உயிர்ப்பான வேர் அரும்புகள் காணப்படும் பகுதிகளுக்கு பசளைகளை இடவும். பொதுவாக பெரும்பாலான வேர்அரும்புகள் தாவரத்தின் இலை விதானத்தின் வெளிப்புற விளிம்பிற்கு சமாந்திரமாக மண்ணில் பரவிக் காணப்படும்.



உயிர்ப்பான வேர் அரும்புகள் பரவலாக காணப்படுகின்றன.

- மேற்கட்டு பசளையை பல சந்தர்ப்பங்களில் இடும் போது வேர்த் தொகுதியின் வளர்ச்சிக்கு பொருத்தமான விதத்தில் ஒவ்வொரு தடவையும் பசளையிடும் இடத்தை மாற்றிக் கொள்ளவும்.



- மழை பெய்யும் நாட்களில் அல்லது கன மழைக்கு முன்னர் பசளை இட வேண்டாம். ஏனெனில் நாம் பயிருக்கு இடும் பசளைகள் மழை நீரினால் கழுவிச் செல்லப்படலாம்.
- சிபாரிசு செய்யப்பட்டுள்ள பசளை அளவை மாத்திரம் பயன்படுத்தவும். அதிகளவில் பசளை இடுவதனால் மண்ணின் உப்புச் செறிவு அதிகரித்து வேர் மூலமான போசணைச்சத்து அகத்துறிஞ்சல் குறைவடையும். இதன் காரணமாக வேர்கள் சேதம் அடையலாம். சில சந்தர்ப்பங்களில் வேர்கள் இறந்தும் போகலாம்.

வினைத்திறனான மேற்கட்டுப் பசளை பிரயோகத்திற்கு சரியான நேரத்தில், சரியான இடத்திற்கு சரியான அளவு பசளையை இடுவது மிகவும் முக்கியமானது.

13 போசணைச்சத்துக் குறைபாடுகளும் அவற்றிற்கான சிகிச்சைகளும்

சரியான போசணைச்சத்து முகாமைத்துவம் மற்றும் சிறந்த நீர்ப்பாசனம் மூலம் மண்ணின் **pH** பெறுமானம் மற்றும் **EC** பெறுமானத்தை பயிர்களுக்கு போசணைச்சத்துக்களை அகத்துறிஞ்சப்படுவதற்கு பொருத்தமான வீச்சுனுள் பராமரிக்கப்படும் சந்தர்ப்பங்களில் பயிர்களில் போசணைச்சத்துக் குறைபாடுகள் ஏற்படுவதில்லை. எனினும் எமது பயிர்ச்செய்கையில் அவ்வாறான போசணைச்சத்து குறைபாடுகள் உருவாகுமாயின் நாம் எவ்வாறு அதனை இனங்கண்டு கொள்வது மற்றும் அவ்வாறான நிலைமைகள் உருவாவதை தவிர்த்துக் கொள்ள மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் என்ன? என்பதனை பார்ப்போம்.

N குறைபாட்டின் போது



பொதுவான குறைபாட்டு அறிகுறிகள்	தவிர்த்துக் கொள்வதற்கான சிகிச்சைகள்
● பயிரின் முதிர்ச்சியடைந்த இலைகள் ஒரே சீராக மஞ்சள் நிறமாக மாறும். இது விசேடமாக பயிரின் கீழ்பகுதி இலைகளில் ஆரம்பித்து மேல் நோக்கி பரவலடையும். ● பயிரின் வளர்ச்சி குறைவடையும் ● பயிரில் பூத்தல், காய்த்தல், தாமதமடையும்	● யூரியா, அமோனியம் நைத்திரேற்று போன்ற அதிகளவில் நைதரசன் காணப்படும் பசளைகளை பயன்படுத்தல். ● இந்நிலைமையை விரைவாக சரி செய்ய 0.5% செறிவுள்ள யூரியா அல்லது 0.3 - 0.5% செறிவுள்ள அமோனியம் சல்பேற்று அல்லது 0.2-0.5% செறிவுள்ள கல்சியம் நைத்திரேற்று போன்ற நைதரசனை கொண்டுள்ள திரவப் பசளைகளை இலைக்கு விசிறவும்.

பொசுபரசு (P) குறைபாட்டின் போது


தக்காளி


கோவா

பொதுவான குறைபாட்டு அறிகுறிகள	தவிர்த்துக் கொள்வதற்கான சிகிச்சைகள்
• பயிரில் உள்ள முதிர்ச்சியடைந்த இலைகள் கடும் பச்சை நிறமாக மாறி பின்னர் ஊதா நிறமாக மாறும். இலைகளின் முறிந்து போகும் இயல்பு அதிகரிக்கும். • பழைய இலை விளிம்புகளில் எரிந்த தோற்றத்தை அவதானிக்கலாம். • பயிரின் வளர்ச்சி குன்றும். குறளடையும். • வேர் வளர்ச்சி பாதிப்படையும். இதனால் பயிரின் நிலைத்து நிற்கும் தன்மை மற்றும் வரட்சியை தாங்கும் ஆற்றல் குறைவடையும். • பயிர் பூப்பதற்கும் எடுக்கும் காலம் அதிகரிக்கும் பூக்கள் மற்றும் காய்கள் உருவாதல் குறைவடையும். விளைச்சல் குறையும்	• சுப்பர் பொசுபேற்று அல்லது அமோனியம் பொசுபேற்று போன்ற பொசுபரசு அடங்கியுள்ள பசளை வகை ஒன்றை பயன்படுத்தல். • இந்நிலைமையை விரைவாக சரிசெய்ய 0.2-.0.5% செறிவுள்ள டைஅமோனியம் பொசுபேற்று போன்ற பொசுபரசு அடங்கியுள்ள திரவப் பசளை ஒன்றை தாவர இலைகளுக்கு விசிறவும்.

பொட்டாசியம் (K) குறைபாட்டின் போது



உருளைக்கிழங்கு



தக்காளி

பொதுவான குறைபாட்டு அறிகுறிகள்	தவிர்த்துக் கொள்வதற்கான சிகிச்சைகள்
● இலையின் நடுப்பகுதியில் உள்ள இலைநரம்புகளும் அதனைச் சூழவுள்ள பகுதிகளும் பச்சை நிறமாக காணப்படும் அதேவேளை முதிர்ச்சியடைந்த இலைகளின் நுனிப்பகுதி மற்றும் இலைவிளிம்பிற்கு அருகிலுள்ள பகுதிகள் மஞ்சள் நிறமாக அல்லது கபில நிறமாக மாறும். ● இலைகளில் மஞ்சள் நிறமாக மாறியுள்ள பகுதிகளில் எரிந்த அடையாளங்கள் அல்லது கபில நிறமான இறந்த அடையாளங்கள் உருவாகும். ● பயிரின் தண்டு பலவீனமடையும். இவ்விதமாக பலவீனமான தண்டை கொண்ட தாவரங்களில் சிலவேளைகளில் முறிந்து விழும். ● பயிரின் காய்கள் சுருங்கி, முறுக்கப்பட்டு காணப்படுவதுடன் காய்களை உடைத்து பார்க்கும் போது விதைகளும் சுருங்கி முறுக்கப்பட்டு காணப்படுமாயின் அது பொட்டாசியம் குறைபாட்டு அறிகுறியாகும்.	● பொட்டாசியம் குளோரைற்று (மியுரேற்றுப் பொட்டாசு) அல்லது பொட்டாசியம் சல்பேற்று போன்ற பொட்டாசியம் அதிகளவில் காணப்படும் பசளைகளை இடல். ● இந்நிலைமையை விரைவாக சரிசெய்ய 0.3 - 0.5% செறிவுள்ள பொட்டாசியம் சல்பேற்று 0.5% செறிவுள்ள பொட்டாசியம் நைத்திரேற்று போன்ற பொட்டாசியம் அடங்கியுள்ள திரவப் பசளை ஒன்றை இலைகளுக்கு விசிறவும்.

கல்சியம் (Ca) குறைபாட்டின் போது



தக்காளி



ஸ்டோபெரி

பொதுவான குறைபாட்டு அறிகுறிகள்	தவிர்த்துக் கொள்வதற்கான சிகிச்சைகள்
● காய்களின் அடிப்பகுதியில் இருட்டான, உட்குழிவான அடையாளங்கள் உருவாகி அழுகல் அடையும். ● இளம் இலைகளின் காம்புகள் அல்லது இலை விளிம்புகள் எரிந்தது போன்று தோற்றமளிக்கும். ● புதிய இலைகள் கோப்பை போன்ற வளைந்து சுருங்கி காணப்படும். ● இலைகள் வழமையான இலைகளை விட பருமனில் சிறிதாக காணப்படும். இலைகள் சுருண்டு அல்லது விகாரமடைந்து காணப்படும். இலையின் நுனிப்பகுதி பின்நோக்கி வளைந்து காணப்படும். ● குறைபாடு தீவிரமாக காணப்படும் போது பயிரில் இளம் அரும்புகள் உலர்ந்து போகும். இளம் பூக்கள் உதிர்ந்து போகும். ● பயிரின் வளர்ச்சி குறைவடைந்து குறளடையும். ● வேர்த் தொகுதியின் வளர்ச்சி பலவீனமடையும் சில சந்தர்ப்பங்களில் வேர்கள் அழுகலடையும்.	● இந்நிலைமையை விரைவாக சரி செய்ய கல்சியம் நைத்திரேற்று போன்ற கல்சியம் அடங்கிய திரவ பசளை ஒன்றை 0.2% செறிவில் இலைகளுக்கு விசிறல். ● நீண்ட கால தீர்வாக சிபாரிசு செய்யப்பட்டுள்ள அளவு சுண்ணாம்பு (கல்சியம் காபனேற்று) அல்லது டொலமைற்று (கல்சியம் மக்னீசியம் காபனேற்று) இனை மண்ணிற்கு அல்லது வளர்ப்பூடகத்திற்கு சேர்த்து கலந்து விடுவதன் மூலம் மண்ணில் கல்சியத்தின் அளவை அதிகரித்துக் கொள்ள முடியும்.

மக்னீசியம் (Mg) குறைபாட்டின் போது



தக்காளி



உருளைக்கிழங்கு

பொதுவான குறைபாட்டு அறிகுறிகள்	தவிர்த்துக் கொள்வதற்கான சிகிச்சைகள்
● பயிரின் பழைய இலைகளில் இலைநரம்பு மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகள் பச்சை நிறமாக காணப்படும் அதேவேளை இலை நரம்புகளுக்கு இடைப்பட்ட பகுதிகள் மஞ்சள் நிறமாக மாறும். ● பயிரிலுள்ள முதிர்ச்சியடைந்த பழைய இலைகளின் இலை விளிம்புகளிலிருந்து உள்நோக்கி மஞ்சள் நிறமாக மாறும். ● இலையின் பாகங்கள் மென்மையாகி உலர்ந்து போகும். இலைகளை நொருக்கும் போது இவை இலகுவாக துண்டு துண்டாக உடைந்து போகும். ● குறைபாடு தீவிரமாக உள்ள போது இலைகளின் ஓரங்களிலிருந்து ஆரம்பித்து உள்நோக்கிப் பரவிச் செல்லும் செங்கபில நிறமான அடையாளங்களை இலைகளில் அவதானிக்க முடியும். ● நோய் மற்றும் பீடைகளை சகித்து வாழும் ஆற்றல் மற்றும் பயிரின் வளர்ச்சி குறைவடையும். ● பூக்கள் மற்றும் காய்கள் உருவாதல் குறைவடையும் விளைச்சல் குறைவடையும்.	● இந்நிலைமையை விரைவாக சீர் செய்ய ஜிப்சம் உப்பினை (மக்னீசியம் சல்பேற்று) நீரில் கரைத்து 0.2-0.5% செறிவில் இலைகளுக்கு விசிறவும். ● நீண்ட கால தீர்வாக சிபாரிசு செய்யப்பட்டுள்ள அளவு மங்கீனிசியம் சல்பேற்றினை மண்ணிற்கு அல்லது வளர்ப்பூடகத்திற்கு இடவும்.

கந்தகம் (S) குறைபாட்டின் போது



வெள்ளரி



பெல்பெப்பர்

பொதுவான குறைபாட்டு அறிகுறிகள	தவிர்த்துக் கொள்வதற்கான சிகிச்சைகள்
● பயிரில் இளம் இலைகள் ஒரே சீராக மஞ்சள் நிறமாக மாறும். ● பயிரின் வளர்ச்சி குறைவடையும் இலைகள் சிறிதாகும். இலை வளையங்களுக்கிடையான தூரம் குறைவடைந்து பயிர் குறளடையும். ● பூத்தல் மற்றும் காய்கள் உருவாக நீண்ட காலம் எடுக்கும். ● பூக்கள் மற்றும் காய்கள் உருவாதல் குறையும் விளைச்சல் குறைவடையும்.	● இந்நிலைமையை விரைவாக சீர் செய்ய அமோனியம் சல்பேற்று அல்லது பொட்டாசியம் சல்பேற்று அல்லது மக்னீசியம் சல்பேற்று போன்ற கந்தகம் அடங்கியுள்ள திரவப் பசளை ஒன்றை 0.2% செறிவில் இலைகளுக்கு விசிறவும். ● பயிருக்கு தேவையான கந்தகத்தை இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கு பொருத்தமான விதத்தில் மண்ணின் pH மற்றும் EC பெறுமானங்களை சரி செய்து கொள்ளவும். ● நீண்ட காலத் தீர்வாக சிபாரிசு செய்யப்பட்டுள்ள அளவு கந்தகத்தை மண்ணிற்கு அல்லது வளர்ப்பூடகத்திற்கு இடவும்.

பொதுவாக மண்ணிற்கு சேர்க்கப்படும் சேதனப் பொருட்கள் மூலம் பயிருக்கு தேவையான அனைத்து நுண்போசணைச்சத்துக்களும் கிடைப்பதனால் மிக அரிதாகவே நுண் போசணைச்சத்துக் குறைபாடுகள் ஏற்படுகின்றன.

குறைபாட்டு அறிகுறிகள் வெளிக்காட்டப்படும் சந்தர்ப்பங்களிலும் நுண்போசணைச்சத்துக்கள் மிகவும் குறைவான அளவுகளிலேயே அவசியப்படுவதனால் நுண்போசணைச்சத்துக்களை வழங்கும் போது மிகவும் அவதானத்துடன் செயற்படல் வேண்டும். விசேடமாக சந்தையில் காணப்படும் பெரும்பாலான திரவப் பசளைகளுக்கு சரியான சிபாரிசுகள் இல்லாமையினால் அவற்றை பயன்படுத்தும் போது கவனமாக செயற்படுங்கள். நுண்போசணைச்சத்துக்களை அளவை விட அதிகமாக இடும் போது அவை பயிர்களுக்கு நஞ்சாக மாறலாம்.

நுண்போசணைச்சத்து குறைபாட்டு அறிகுறி	குறைபாட்டு அறிகுறிகளின் உருவப்படம்	தவிர்த்துக் கொள்வதற்கான சிகிச்சைகள்
இரும்பு (Fe) ▶ இளம் இலைகளில் இலை நரம்புகளுக்கு இடைப்பட்ட பகுதிகள் மஞ்சள் நிறமாக மாறும். ▶ குறைபாடு தீவீரமடையும் போது இளம் இலைகள் மஞ்சள் நிறத்திலிருந்து வெண்ணிறமாக மாறும். ▶ இலைகள் பருமனில் சிறிதாகும். ▶ பூத்தல் மற்றும் காய்த்தல் பாதிப்படையும். ▶ பயிர் குறள் அடையும்.	 மிளகாய் பயிர்ச்செய்கை	▶ இந்நிலைமையை விரைவாக சரி செய்ய இரும்பு கீலேட் (உ-ம்: Fe EDTA) போன்ற இரும்பை பெற்றுக் கொள்ள முடியுமான திரவப் பசளை ஒன்றை 0.5% செறிவில் இலைகளுக்கு விசிறல். ▶ மண்ணின் pH பெறுமானத்தை உரிய வீச்சில் பராமரித்தல்.
மங்கனிசு (Mn) ▶ இளம் இலைகளின் இலை நரம்புகளுக்கு இடைப்பட்ட பகுதிகள் மஞ்சள் நிறமாக மாறும். ▶ இது இரும்பு குறைபாட்டின் அறிகுறிகளை ஒத்ததாக காணப்பட்ட போதிலும் மஞ்சள் நிறமான இடங்களில் கபில நிறமான அடையாளங்கள் உருவாகும்.	 தக்காளி பயிர்ச்செய்கை	▶ இந்நிலைமையை விரைவாக சரி செய்ய மங்கனிசு சல்பேற்று அல்லது மங்கனீசு அடங்கியுள்ள திரவப் பசளை ஒன்றை 0.2% செறிவில் இலைகளுக்க விசிறவும். ▶ பயிர்நிலத்தை நீர் வடிந்தோடக்கூடிய விதத்தில் தயார் செய்யவும்.

நுண்போசணைச்சத்து குறைபாட்டு அறிகுறி	குறைபாட்டு அறிகுறிகளின் உருவப்படம்	தவிர்த்துக் கொள்வதற்கான சிகிச்சைகள்
நாகம் (Zn) ▶ முதலில் முதிர்ந்த இலைகளில் இலை நரம்புகளுக்கு இடைப்பட்ட பகுதி மஞ்சள் நிறமாக மாறும். பின்னர் அவ்விடம் கபில நிறமாக மாறும். ▶ பயிரின் கணுவிடை நீளம் குறைவடையும். சுருக்கங்கள் கொண்ட சிறிய விகாரமடைந்த இலைகள் உருவாகும். ▶ பயிரின் வளர்ச்சி குன்றும் விளைச்சல் குறைவடையும்.	 தக்காளிப் பயிர்ச்செய்கை	▶ இந்நிலைமையை விரைவாக சரி செய்ய நாக சல்பேற்று அல்லது நாகம் அடங்கியுள்ள கீலேட் போன்ற நாகத்தினை வழங்க முடியுமான திரவப் பசளை ஒன்றை 0.2% செறிவில் இலைகளுக்க விசிறவும். ▶ பயிருக்கு சேதன பொருட்களை சேர்த்தல்
செப்பு (Cu) ▶ இளம் இலைகள் சுருங்கி விகாரமடைந்து காணப்படும். ▶ இலைகள் கடும் பச்சை அல்லது நீல நிறமாக மாறும். ▶ இலைகள் மற்றும் கிளைகளின் நுனிபகுதிகள் இறக்கும் ▶ வளர்ச்சி பாதிப்படையும். ▶ பூத்தல் குறைவடையும்	 பெல்பெப்பர் பயிர்ச்செய்கை	▶ இந்நிலைமையை விரைவாக சரி செய்ய செப்பு சல்பேற்று அல்லது செப்பு அடங்கியுள்ள கீலேட் போன்ற செப்பினை வழங்க முடியுமான திரவப் பசளை ஒன்றை 0.2% செறிவில் இலைகளுக்க விசிறவும். ▶ செப்பு அகத்துறிஞ்சலை பாதிக்கக்கூடிய அதிக பொசுபரசு மட்டத்தினை தவிர்த்துக் கொள்ளவும்.
போரன் (B) ▶ இலைகள் மற்றும் அரும்புகள் விகாரமடைந்து இறந்து போகும். ▶ தண்டு இலகுவாக உடைந்து போகும். ▶ பூத்தல் குறைவடையும் பூக்கள் உதிரும் ▶ காய்கள் மற்றும் விதைகள் விகாரமடையும் வளர்ச்சி பாதிப்படையும்	 தக்காளிப் பயிர்ச்செய்கை	▶ சிபாரிசின் அடிப்படையில் மண்ணிற்கு போரெக்ஸ் (Borax) இட முடியும். குறைபாடு தீவிரமாக காணப்படின் போரெக்ஸினை நீரில் கரைத்து 0.2% செறிவில் இலைகளுக்க விசிறவும். ▶ மண் ஈரலிப்பை சிறந்த முறையில் பேணல்.

நுண்போசணைச்சத்து குறைபாட்டு அறிகுறி	குறைபாட்டு அறிகுறிகளின் உருவப்படம்	தவிர்த்துக் கொள்வதற்கான சிகிச்சைகள்
மொலிப்தனம் (Mo) ✶ ▶ நைதரசன் குறைபாட்டை ஒத்ததாக முதிர்ந்த பழைய இலைகள் மஞ்சள் நிறமாக மாறுவதுடன் இடைக்கிடையே கபில நிற அடையாளங்கள் உருவாகும். ▶ அவரைக் குடும்ப பயிர்களில் பலவீனமான வேர் முடிச்சுக்கள் உருவாகும்.		▶ சோடியம் மொலிப்டேற்று அல்லது அமோனியம் மொலிப்டேற்று இடவும். ▶ பொதுவாக அதிக அமிலத்தன்மையான மண் அல்லது விசேடமான சிலவகை பயிர்களுக்கு மாத்திரம் இது அவசியப்படும்.
குளோரின் (Cl) ✶ ▶ தாவரங்கள் வாடும், இலைகள் செப்பு நிறமாகும். இலைகளில் சுருக்கங்கள் உருவாகும். ▶ வளர்ச்சி குறைவடையும் ▶ இந்நிலைமை மிக அரிதாகவே ஏற்படும்		▶ பொட்டாசியம் குளோரைற்று அல்லது சோடியம் குளோரைற்று சேர்த்தல் ▶ சிறந்த நீர்ப்பாசனம் மூலம் பழைய நிலைக்கு மீட்கலாம்.
நிக்கல் (Ni) ✶ ▶ விதைகளின் முளைதிறன் பாதிப்படையும் ▶ பயிரின் இலைகளின் நுனிப்பகுதிகள் மஞ்சள் நிறமாக மாறும். பின் கபில நிறமாகும். எரிவிற்கு உட்பட்டது போன்று தோற்றமளிக்கும் ▶ உயரம் குறைந்த தாவரம் குறளடையும்		▶ நிக்கல் சல்பேற்று அல்லது நிக்கல் குளோரைற்றை சேர்த்தல். ▶ சமநிலையான பசளை பிரயோகம்.


✶ மேற்படி குறைபாடுகள் இலங்கையில் பரவலாக அவதானிக்கப்படுவதில்லை


14 பசளைப் பாவனையானது சுற்றுச்சூழல் மற்றும் மனித ஆரோக்கியத்தில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள்

நவீன விவசாயத்தில் பசளையானது தவிர்க்க முடியாத ஒன்றாகும். பசளைகள் எமக்கு உயர்தரமான கூடிய விளைச்சலை பெற்று கொள்ள உதவுகின்ற அதேவேளை மனிதர்களின் ஆரோக்கியம் மற்றும் சுற்றுச்சூழலின் பாதுகாப்பிலும் பாதிப்பினை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்களும் உள்ளன.


உரிய முகாமைத்துவம் இன்றி பசளைகளை பயன்படுத்துவதனால் மனிதர்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்களை அறிந்து கொள்வோம்.








நீண்ட காலத்திற்கு தொடர்ச்சியாக அதிகளவில் பசளைகளை பயன்படுத்துவதனால் பாதகம் விளைவிக்கும் உயிரிகள் பெருக்கமடைவதுடன் நன்மை தரும் உயிரிகள் அழிவடையவும் முடியும். இதனால் சுற்றுச்சூழல் சமநிலை பாதிப்படையும்.



நைதரசன் அடங்கியுள்ள இரசாயனப் பசளைகளை அதிகளவில் பயன்படுத்துவதனால் வளிமண்டலத்திற்கு பச்சை இல்ல வாயு விடுவிக்கப்படுதல் அதிகரிக்கும். இதனால் ஏற்படும் காலநிலை மாற்றங்களினால் விவசாயத்துறையும் மனிதர்களின் உயிர்வாழ்வும் ஆபத்தை எதிர்நோக்கலாம்.



நீண்ட காலமாக இரசாயன பசளைகளை கையாள்வதனால் விவசாயிகளுக்கு சுவாச நோய்கள் உருவாகலாம்.

15 சில பயிர்களுக்கான அடிக்கட்டு மற்றும் மேற்கட்டு பசளைச் சிபாரிசுகள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

(ஒரு ஏக்கரிற்கான தேவையான பசளையின் அளவு கிலோ கிராமில் தரப்பட்டுள்ளது)

அனைத்து பயிர்களுக்கும் நிலப்பண்படுத்தல் மேற்கொள்ளும் போது, ஒரு ஏக்கரிற்கு சுமார் 4000 கிலோகிராம் சேதனப்பசளையினை சேர்த்து விடவும்.

பயிர்	அடிகட்டுப் பசளை			முதலாவது மேற்கட்டுப பசளை		இரண்டாவது மேற்கட்டுப் பசளை		மூன்றாவது மேற்கட்டுப் பசளை		நான்காவது மேற்கட்டுப பசளை	
	யூறியா	டி.எஸ்.பி	எம்.ஒ.பி	யூறியா	எம்.ஒ.பி	யூறியா	எம்.ஒ.பி	யூறியா	எம்.ஒ.பி	யூறியா	எம்.ஒ.பி
கறிமிளகாய்	40	88	26	40	26						
வெள்ளரி	30	80	24	30	24	30	24				
வெண்டி	20	78	10	20	10	40	20	40	20		
கெக்கரி	30	80	24	30	24	30	24				
புடோல்	30	78	24	30	24	30	24				
மிளகாய்[1]	-	40	20	40	-	50	-	50	20	50	-
போஞ்சி	44	108	30	44	30						
தக்காளி[2]	26	130	26	26		26	26				
கோவா	-	110	30	44	-	44	30	44	-		
கத்தரி	30	130	34	30	-	30	34	30	-		

பயிர்	அடிகட்டுப் பசளை			முதலாவது மேற்கட்டுப பசளை		இரண்டாவது மேற்கட்டுப் பசளை		மூன்றாவது மேற்கட்டுப் பசளை		நான்காவது மேற்கட்டுப பசளை	
	யூறியா	டி.எஸ்.பி	எம்.ஒ.பி	யூறியா	எம்.ஒ.பி	யூறியா	எம்.ஒ.பி	யூறியா	எம்.ஒ.பி	யூறியா	எம்.ஒ.பி
லீக்ஸ்	34	110	20	34		34	20	34		34	20
கரட்		108		22	17.2	33	25.4	33	25.4	44	34
உருளைக் கிழங்கு[3]	22	110	50	44		66	50				
பீட்றூட்	66	108	50	66	50						
பூ கோவா[4]		108	30	44		44	30	44			
பூ கோவா[5]	44	108	30	44	-	44	30				-
பூசணி	30	80	24	30	24	30	24				
சுண்டங்கத்தரி	30	130	34	30		30	34	30			

முக்கிய குறிப்பு - முதலாவது இரண்டாவது மூன்றாவது மற்றும் நான்காவது மேற்கட்டுப் பசளையினை இடவேண்டிய காலப்பகுதியானது பயிரிற்கு பயிர் வேறுபடும். அது தொடர்பான மேலதிக தகவல்களை குறித்த பயிரிற்கான பயிர்ச்செய்கை கையேடு மூலமாகவோ விவசாய உத்தியோகத்தர் மூலமாகவோ பெற்றுக் கொள்ளவும்.

1.- மிளகாய் நாற்றுக்களை நட்டு 16 வாரங்களில் யூரியா 50 கிலோ கிராமினை மேற்கட்டுப் பசளையாக இடவும்.

2.- தக்காளி – பதுளை மாவட்டத்தில் மேற்படி அடிக்கட்டு பசளை கலவையில் ஒரு ஏக்கரிற்கு மியுரேற்று பொட்டாசு 130 கிலோ கிராமிற்கு பதிலாக ஒரு ஏக்கரிற்கு 86 கிலோ கிராம் மியுரேற்று பொட்டாசு இடவும்.

3.- உருளைக்கிழங்கு - உருளைக்கிழங்கு விதைகளை நடுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக சுண்ணாம்பு ∴ டொலமைற்று800 கிலோ கிராமையும் நடுவதற்கு 3-5 நாட்களுக்கு முன்பாக கோழி எரு 2000 கிலோ கிராமினையும் சாணம் 4000 கிலோ கிராமினையும் இடவும்

4.- பூ கோவா – நுவரெலியா மாவட்டத்திற்கான பசளை சிபாரிசு

5.- பூ கோவா – ஏனைய பிரதேசங்களுக்கான (நுவரெலியா தவிர்ந்த) பசளைச் சிபாரிசு

திகதி	குறிப்பு

திகதி	குறிப்பு

திகதி	குறிப்பு

பதிப்புரிமை

பதிப்புரிமை © 2025 விவசாயத் திணைக்களம்
முழுப் பதிப்புரிமையுடையது

இப்புத்தகத்தில் உள்ள விடயங்கள் மற்றும் விளக்கப்படங்கள் விவசாயத் திணைக்களத்திற்கு சொந்தமானவை. இவ்வெளியீட்டை அல்லது விளக்கப்படங்களை தனித்தனியாக மீள் பதிப்பு செய்வதற்கு தேவையான எழுத்துமூல அனுமதியினை பெற்றுக் கொள்ள விவசாயத் திணைக்களத்தை தொடர்பு கொள்ளவும்.

விவசாயத் திணைக்களம்
தபால் பெட்டி இலக்கம் 01,
பேராதனை, இலங்கை
தொ.பே.இல. - +94 812 388 331
மின்னஞ்சல் முகவரி - info@doa.gov.lk
வலைத்தளம் - www.doa.gov.lk